**தலைப்பு 401 – தேசிய மரபுரிமை, அருங்கலை மற்றும் கிராமிய சிற்பக்கலை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய மரபுரிமை, அருங்கலை கிராமிய சிற்பக்கலை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய மரபுரிமை, அருங்கலை மற்றும் கிராமிய சிற்பக்கலை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 ஜூன் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் தேசிய கணக்காய்வு அறிக்கை 2022 ஜுலை 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களில் இருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தேசிய மரபுரிமை, அருங்கலை மற்றும் கிராமிய சிற்பக்கலை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில்

தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நெரொத்துள்ளன என

(ஆ) முன்னைய ஆண்டுக்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருட இறுதியில் உள்ளவாறு அமைச்சுக்கு சொந்தமாக 03 வாகனங்கள் காணப்பட்டதுடன், 2021/12/31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் (ஏசீஏ-பீ படிவம்) மற்றும் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக விரிவான குறிப்பில் (சீஏசீ-6) அந்த வாகனங்களின் பெறுமதி அடங்கியிருக்கவில்லை. | அமைச்சுக்கு சொந்தமாக தற்போது காணப்படும் வாகனங்கள் உரிய நிறுவனங்களில் இருந்து அமைச்சுக்கு உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | வாகனங்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.6.2 கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய தலைப்புகளுக்காக அமைச்சினால் சேகரிக்கப்பட்ட ரூபா 48,410,693 இற்கான வருமான நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் ஏனைய பிரதான பேரேட்டின் கணக்குகள் பெறுவனவுகள் என உட்படுத்தப்பட்டிருந்தமையால் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவு ரூபா 48,410,693 தொகை மிகையாக மற்றும் கட்டுநிதி மீதி ரூபா 48,410,693 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | அந்த வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் மற்றும் கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சீராக்கல் செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 இலக்க தேசிய கணக்கு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றன என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அந்த முறைமையின் வெற்றிகரமான தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், இந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று நடாத்தப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது அமைச்சில் பேணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வொன்று மேற்கொண்டு இருக்காததுடன், எதிர் காலத்தில் முறைமை ஆக்கபூர்வமாக தயாரித்துச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொண்ட பின்னர் தேவையான மாற்றங்கள் மேற்கொண்ட பின்னர் அதன் பிரதியொன்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கின்றேன். | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறிப்பிட்ட காலப் பகுதியில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளித்தல் நடைபெறுகின்றன என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்திருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் தயாரிக்கப்பட்டு உடனடியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை உரிய முறையில் செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடைமுறை ஒன்று காணப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் | இந்த அமைச்சுக்காக உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று அங்கீகரித்துத் தரும்படி வேண்டி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு வேண்டுதல் ஒன்று சமர்ப்பிகக்கப்பட்டது. பதவி அங்கீகரிக்கப்பட்டவுடனே | - மேற்படி - |

| | |
|---|---|
| உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களின் படி உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்து அல்லது உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவுவதற்கு எதிர்பார்க்கின்றேன். தற்போது புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர்களினால் அந்தக் கருமம் மேற்கொள்ளப்படுகின்றது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுடன் அணுகுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணான 08 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 01 மூலதன செலவு விடயம் தொடர்பாக ரூபா 3,983,308 இற்கான ஏற்பாடுகள் மீதியை மிகைத்து ரூபா 5,044,625 இற்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | 03 செலவு விடயங்கள் தொடர்பவை எனவும், வாகன திருத்தி வேலைகள் மிகைத்தல், திசெம்பர் மாதத்திற்குரிய தொலைபேசி பில் பத்திரம் 2022 இல் செலுத்துதல், அபேகமவிற்காக செலவு விடயம் ஒன்று ஒதுக்கப்படாமையால், கிராமியக் கலை தலைமையகம் செலவு விடயத்தின் கீழ் செலவு மேற்கொள்ள நேரிடல், மலை நாட்டு, மரபுரிமையை பாதுகாப்பதற்கான இடைக்கால நியதிச் சட்ட சபைக்காக செலவு விடயமொன்று காணப்படாமையால் நி.பி. 66 மாற்றத்திற்தின் மூலம் செலவு மேற்கொள்ளல் இதற்காக காரணமாக இருந்தது. | செலுத்த வேண்டிய அனைத்து பெறுமதிகளும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் படி 11 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 4,419,964 இற்கான மீதியொன்று காட்டப்பட்டிருந்த போதிலும் அந்தப் பொறுப்புக்களுக்கு மேலதிகமாக உறுதிச்சீட்டு தெரிவுப் பரிசோதனையின் போது 2022 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 2021 ஆண்டிற்குரிய 27 சந்தர்ப்பங்களில் ரூபா 12,374,686 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி நிதிக்கூற்றுக்களில் மொத்த | தேசிய அருங்கலைகள் மத்திய நிலைய செலவுகள் பொது வைப்புக் கணக்கு மூலம் மேற்கொள்ளப்படுவதனால் அதற்கான செலவுகள் பொறுப்புக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த செலவுகள் எதிர்காலத்தில் பொறுப்புக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்படும். அமைச்சு, நிறுவனங்களின் முன்னைய ஆண்டிற்குரிய பில் பத்திரங்கள் 2022 ஆண்டின் பொறுப்புக்கள் பதிவேட்டில் | வருட இறுதியிலுள்ள அனைத்து ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களை கணக்கீடு செய்ய வேண்டும். |

ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 12,374,686 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. உட்படுத்தப்பட்டுள்ளது.

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளது.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 149(1) | நெலும்பொகுன நாடக அரங்கினால் உழைக்கப்படும் வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலுத்தப்படாமல் தேசிய மரிபுரிமை, அருங்கலை மற்றும் கிராமிய சிற்பக்கலை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் இலக்கம் 009-0-020-0-0-6000 கொண்ட பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | இந்த நிறுவனத்திற்காக செலவு விடயம் ஒன்று ஏற்படுத்தி அதனது செலவுகளை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என பாதீட்டுத் திணைக்களத்தினால் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படடிருந்தது. | உழைக்கும் அனைத்து வருமானங்களும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 இன் 40 இலக்க இலங்கை அணுச்சக்திச் சட்டத்தின் பிரிவுகள் 18(1)(அ) மற்றும் பிரிவு 20(1) | நெலும்பொக்குன நாடக அரங்கத்திற்காக பயணப்பைகளை பரிசோதனை செய்யும் இயந்திரமொன்று அயனியாக்க கதிர்வீச்சுடன் தொடர்புடைய செயல் நடவடிக்கை ஒன்று நடாத்துதல் தொடர்பாக சபைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இலங்கை அணுச்சக்தி ஒழுங்குறுத்தல் சபையின் பணிப்பாளர் நாயகத்தின் AERC/CS/11/G4/3 மற்றும் 2021 ஏப்ரல் 09 திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்திருந்தவாறு இயந்திரத்தின் பைகளை கொண்டு செல்லும் நாடா ஒன்றின் குறைந்த அளவு நீளம் (Conveyor belts) 1 மீற்றர் ஆக காணப்பட வேண்டியிருந்த போதிலும், நாடக அரங்கினால் கொள்வனவு செய்திருந்த இயந்திரம் அந்தத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்திருக்கவில்லை. | மேற்கூறிய இயந்திரத்தில் பரிமாணத்ததுடன் (Dimension) பதிவு செய்யப்படுகின்றது. அதன் காரணமாக அணுசக்தி நிறுவனத்தின் இணக்கப்பாடுகளை பூர்த்தி செய்கின்றதென அவதானிக்கப்பட்டது. பயணப்பைகளை இயந்திரத்துள் எடுத்துச் செல்லும் நாடாவின் நீளம் (Conveyor belts) 1 மீற்றர் என அவதானிக்கப்பட்டது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 3(1) | நெலும்பொகுன நாடக அரங்குக்குரிய செலவுகள் வருடாந்த மதிப்பீட்டுக்கு உட்படுத்தி பாராளுமன்ற அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலவுகள், திட்டங்கள் வருடாந்த மதிப்பீட்டில் உட்படுத்தி பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 156 மற்றும் 210(2) | நெலும்பொகுன நாடகரங்கின் மாதாந்த மின்சார கட்டணம் உரிய முறையில் செலுத்தப்படாமையினால் 2021 ஜனவரி முதல் திசெம்பர் வரையான காலப் பகுதிக்காக ரூபா 281,596 இற்கான தாமத வட்டி, துண்டிக்கப்பட்ட மின்சாரத்தை மீண்டும் வழங்குவதற்கான கட்டணமாக ரூபா 6,000 தொகை அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. | மின் கட்டணம் செலுத்துவதற்காக திறைசேரியினால் பணம் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டதனால் பில் பத்திரங்களுக்கான கொடுப்பனவு செய்தல் தாமதம் அடைந்தது. | - மேற்படி - |
| (iii) நிதிப் பிரமாணம் 201(2) | 2021.10.15 திகதி முதல் சம்பளம் இன்றிய வெளிநாட்டுக் கல்வி விடுமுறை பெற்றிருந்த பெண் உத்தியோகத்தர் ஒருவருக்காக 2021 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்குரிய சம்பளம் என ரூபா 94,747 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாக செலுத்தப்பட்டிருந்த சம்பளத்தை மீண்டும் பணமாக செலுத்தும் படி பெண் உத்தியோகத்தருக்கு அறிவிப்பதற்கான கடிதம் 2022.01.31 திகதி அனுப்பப்பட்டது. | - மேற்படி - |
| (iv) நிதிப் பிரமாணம் 261(1) | கூட்டுத்தொகை ரூபா 612,061 தொகைக்கான 02 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை | அனைத்து உறுதிச் சீட்டுக்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | - மேற்படி - |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவை | | | |
| வழிகாட்டல் இலக்கம் 8.12.4, 5.4.6 மற்றும் 5.4.8 | மகிந்த ராஜபக்ஷ தேசிய டெலிசினமா உத்தியானத்தின் உத்தியோகபூர்வ வலைதளம் நிர்மாணிக்கும் செய்முறையின் கருமத்தை பூர்த்தி செய்ய முன்னர் மற்றும் கருமத்தை பூர்த்தி செய்யப்பட்டதென சான்றிதழ் ஒன்றின்றி 2021 திசெம்பர் 15 திகதி ரூபா | 2021 ஆண்டிற்கான கணக்குகளை தீர்க்கும் சுற்றறிக்கையின் 2021.12.15 திகதிக்கு முன்னர் ITMIS கணினி முறைமைக்கு அனைத்து ஈடுபாட்டுப் பொறுப்புக்களையும் உட்படுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்தமையால், | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2,000,000 தொகைக்கான மொத்த ஒப்பந்த வேலைக்கான தொகையையும் செலுத்தியிருந்ததுடன், கணக்காய்வுத் திகதியாகிய 2022 மார்ச் 31 திகதி வரை பொதுமக்களுக்கு பிரவேசிக்கக்கூடிய முறையில் வலைதளம் செயற்படு நிலையில் காணப்படவில்லை. கொடுப்பனவு செய்யும் போது தடுத்துவைத்தல் பணம் கழிக்கப்பட்டிருக்காததுடன், கருமம் பூர்த்தி செய்யப்பட்டு 01 வருடம் வரையான ஒப்பந்த வேலையின் பராமரிப்புக் காலம் அடங்கக்கூடிய விதமாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த செயலாற்றுகை பிணைமுறி கருமம் ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதி முதல் 06 மாதம் வரையான காலப் பகுதிக்காக மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | 2021.12.14 திகதி சமர்ப்பித்திருந்த Invoice கணினி முறைமைக்கு உட்படுத்தப்பட்டது. அதன்படி, 2021.12.31 திகதி காசோலை இலக்கம் 533274 கீழ் குறிப்பிட்ட கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது.<br><br>பராமரிப்புக் காலத்தை ஒரு வருடம் வரை நீடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என கருணையுடன் அறிவித்துக்கொள்கின்றேன். | |
| (உ) | 2017 ஆகஸ்ட் 18 திகதிய இலக்கம் அமப/17/1557/711/017 கொண்ட அமைச்சரவை தீர்மானம் | 2021 திசெம்பர் 31 திகதி வரையும் மலை நாட்டு மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான இடைக்கால நியதிச் சட்ட சபை முறைப் பிரகாரம் நிறுவுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நியதிச் சட்ட சபை ஒன்றிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணத்திற்காக 2022.04.06 திகதி சட்டமா அதிபரினால் அவதானிப்புக்காக அனுப்பப்பட்டிருந்தது. தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மலை நாட்டு மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான இடைக்கால நியதிச் சட்ட சபையை முறைப் பிரகாரம் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சீன தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையின் படி, சீனக் கம்பனிக்கு நாடக அரங்கத்தின் பராமரிப்பு அலுவல்களுக்காக தேவையான உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் துணைக் கருவிகளை வரி செலுத்தாமல் இறக்குமதி செய்வதற்கு வசதி ஏற்படுத்தியிருந்ததுடன், 2021 ஜனவரி முதல் ஜூலை வரையான காலப் பகுதியுள் அரங்கிற்காக சீனக் கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களுக்காக | 2021 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீடு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், சீனக் கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பண்டங்களை முறைப் பிரகாரம் கண்டறிந்து அரங்கத்திற்கு ஒப்படைப்பதற்கு அமைச்சுச் செயலாளரின் அறிவுரையின் படி 03 அங்கத்தவர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. | பண்டங்களை முறைப் பிரகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அமைச்சினால் 09 சந்தர்ப்பங்களில் ரூபா 14,366,103 தொகை சுங்க வரி செலுத்தியிருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் உரிமை இலங்கைக்கு உரித்தாக்கப்பட்டிருந்ததுடன், களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பராமரிப்பு அலுவல்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட 19 வகையான மூலதனப் பண்டங்கள் 74 விடயங்கள் அரங்கிற்கு ஒப்புக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. களஞ்சியத்தில் காணப்பட்ட பண்டங்களை கணிப்பீட்டு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மலை நாட்டு மரபுரிமையை பாதுகாப்பதற்கான இடைக்கால நியதிச் சட்ட சபை தொடர்பான 2017 ஆகஸ்ட் 15 திகதிய MSEW/CM/13/2017 இலக்கம் கொண்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் படி மலை நாட்டு மரபுரிமையை பாதுகாப்பதற்கான 04 செயற்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த 04 செயற்திட்டங்கள் அடிப்படையில் அந்த செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்தன. சபையின் திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய ரூபா 9,022,841 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட 5 செயற்திட்டங்கள் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இந்த செயற்திட்டத்தை உட்படுத்திய போதிலும் நாட்டில் காணப்பட்ட தீவிர டெல்டா கொவிட் நிலைமை காரணமாக 02 மாதங்களை விட மிகையான காலம் நாடு மூடப்பட்டிருத்தல் மற்றும் குறிப்பிட்ட வழிகாட்டல் இலகுவாகும் காலம் தொடர்பாக அறுதியான தெளிவொன்று காணப்படாமையால் இந்த செயற்திட்டம் மேற்கொள்ளல் நிறுத்தப்பட்டது. | மலை நாட்டு மரபுரிமையை பாதுகாத்தல் தொடர்பான 04 செயற்திட்டங்களின் படி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களை பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அமைச்சுக்குரிய செயலாற்றுகை சுட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டங்களின் தன்மையின் படி வெளியீட்டு சுட்டி செயறலாற்றுகை சுட்டியாக காணப்படுவதனால் வெளியீட்டு சுட்டி மாத்திரம் உட்படுத்தப்பட்டது. | அமைச்சுக்காக செயலாற்றுகை சுட்டி இனங்காணப்பட வேண்டும். |
| (இ) | கலைஞர்கள் காப்புறுதித் திட்டம் ஒரு நிறுவனத்தின் கீழ் செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும், நடன கலைஞர்களுக்கான ரசிகர் கலைஞர் காப்புறுதித் திட்டத்திற்காக டவர் மண்டப அரங்க மன்றத்திற்கு ரூபா 15 மில்லியன் தொகையும், அனைத்து கலைஞர்களுக்குமான திடீர் விபத்து மற்றும் மருத்துவ உதவி காப்புறுதித் திட்டத்திற்காக அமைச்சுக்கு ரூபா 10 மில்லியன் தொகையும் ஏற்பாடுகள் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்தன. | டவர் மண்டப அரங்க மன்றத்தினால் செயற்படுத்தப்படும் ரசிக கலைஞர்கள் மருத்துவ உதவி காப்புறுதி டவர் மண்டப அரங்க மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட நடன துறையில் உள்ள கலைஞர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றது. அமைச்சினால் செயற்படுத்தப்படும் கலைஞர்களுக்கான திடீர் விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதி கலைத்துறை, எழுத்துக் கலை மற்றும் நடன துறையும் உள்ளடங்கக் கூடியவாறு வழங்கப்பட்டது. காப்புறுதி உள்ளடக்கம் இரண்டினதும் குறிக்கோள்கள் மற்றும் நலன்பெறுவோர்கள் வித்தியாசப்படுவதுடன் இரட்டிப்படைதல் ஒன்று நடைபெற்றிருக்கவில்லை. | அமைச்சு/ நிறுவனம் தனது குறிக்கோள்கள் மற்றும் கருமங்களை தெளிவாக வரையறை செய்து அதன் மீது செயற்பட வேண்டியதுடன் ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளும் போது இரட்டிப்படையாமல் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடையப்பெறாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலைஞர்கள் தரவு முறைமை ஒன்று நிறுவுதல் மற்றும் கலைஞர்கள் மற்றும் சேவை பெறுவோர் இணைப்பு ஒன்றினை ஏற்படுத்தும் டிஜிடல் முறையிலான முறைமை ஒன்றினை உருவாக்குவதற்காக கணக்காய்வு திகதி வரை பயன்பெறுவோருக்கு பயன்படுத்தக் கூடிய விதமாக உருவாக்கியிருக்கவில்லை. | அமைச்சின் இணையத் தளத்தில் கலைஞர்கள் தரவு முறைமை செயற்படு நிலைமையில் காணப்படுகின்றது. கலைஞர்களுக்காக நிகழ்வு நிலை (online) தரவு முறைமையில் பதிவு செய்வதற்காக மற்றும் தேவையானோருக்கு கலைஞர்கள் தொடர்பான தகவல்கள் தரவு முறைமைக்கு பிரவேசித்து பெற்றுக் கொள்வதற்கு முடியும். கலைஞர்கள் டிஜிடல் உள்ளீடு இரண்டிலும் அனைத்து உருவாக்காத அலுவல்களும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த | திட்டமிடப்பட்ட கருமங்களை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | போதிலும் அவை App Store மற்றும் Play Srore இற்காக தற்போது நிறுவப்பட்டிருக்கவில்லை. அதனை பயன்படுத்துவதற்காக கணிசமான அளவு உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருப்பதனால் அதற்காக குறிப்பிட்ட காலம் ஒன்று செலவிட வேண்டி நேரிடும். | |

**3.3 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நெலும்பொகுன அரங்கத்திற்கு பயணப் பை பரிசோதனை இயந்திரமொன்று (Baggage Scanner) கொள்வனவு செய்வதற்கான பெறுகையின் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விபரக் குறிப்புகளின் படி விற்பனவின் பின்னர் 10 வருடங்கள் சேவை காலம் உள்ளடங்க வேண்டியிருந்த போதிலும் வழங்குனரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகளில் உத்தரவாத காலம் 05 வருடங்களாக இருந்ததுடன், அது முடிவடைந்த பின்னர் ரூபா 3,196,520 தொகை கிரயத்திற்கான சேவை உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. அவ்வாறாயினும், அந்த கிரயம் கூறுவிலைகளை மதிப்பாய்வு செய்யும் போது கவனத்திற்கு எடுத்திருக்கவில்லை. | உத்தரவாத கால இறுதியில் உத்தரவாத காலத்தை நீடிப்பது தொடர்பாக தீர்மானித்தல், உத்தரவாத காலம் முடிவடையும் போதே அரங்கத்தினால் மேற்கொள்ளப்படும் என சுட்டிக் காட்டுகின்றேன். | விலைகூறல்களை மதிப்பாய்வு செய்யும் போது பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | மகிந்த ராஜபக்ஷ தேசிய டெலிசினமா உத்தியானத்தின் உத்தியோகபூர்வ வலைதளம் உருவாக்கும் செய்முறையின் கருமத்திற்காக 03 விலைகூறல்தாரர்கள் கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்தனர். தெரிவு செய்யப்பட்ட விலைகூறல்தாரர்கள் விலைகூறல்களை சமர்ப்பிக்கும் போது கருமத்திற்காக ஈடுபடுத்தப்படும் குழு அங்கத்தவர்களின் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பாக தகவல்கள் சமர்ப்பிக்காமை மற்றும் | விலைகூறல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 02 நிறுவனங்கள் ஒப்பந்த வேலையை பூர்த்தி செய்வதற்கான காலம் சமர்ப்பித்திருக்காமையினால் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், தெரிவு செய்யப்பட்ட நிறுவனம் அனைத்து பகுதிகளுடனான விலைகூறல் சமர்ப்பித்திருந்ததென தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு திருப்தியடைந்து அந்த | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் மற்றும் அங்கீகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் கையொப்பத்துடன் விலைகூறல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை ஆகிய காரணங்களை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைக் குழுவினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தை தெரிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |

**3.4 அரசாங்க உத்தியோகத்தருக்கான பிணை வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சில் காசோலைகள் கையொப்பமிடும் உத்தியோகத்தரிடம் பிணைகள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த அமைச்சு புதிதாக ஏற்படுத்திய அமைச்சொன்றாக காணப்படுவதனால் பிணை வைத்தல் அலுவல்கள் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அந்த அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் பிணை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மலைநாட்டு மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான இடைக்கால நியதிச் சட்ட சபை அலுவலக வளாகத்திற்காக கண்டி மாநகர சபை எல்லையுள் அமைந்துள்ள 6,039 சதுரஅடிக் கட்டிடம் ஒன்று மாதாந்தம் ரூபா 1,000,000 இற்கான வாடகைக்கு பெற்றிருந்ததுடன், அந்த வாடகை உடன்படிக்கை 2020 ஒக்தோபர் 31 திகதி முடிவடைந்திருந்த போதிலும், அதற்காக புதிய இடமொன்றை தெரிவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கையை மேற்கொண்டிருக்காமையால் அந்த உடன்படிக்கையை 2021 ஜனவரி 31 திகதி வரை 03 மாதத்தினால் நீடிக்கப்பட்டிருந்தது. அலுவலக வளாகத்திற்காக தேவைப்படும் தரைப்பகுதி 3,400 சதுரஅடியாக இருந்த போதிலும் முன்னைய உடன்படிக்கையை 03 மாதங்களுக்கு நீடித்த காரணத்தினால் 6,039 சதுரஅடிக்கான உடன்படிக்கை மேற்கொள்ள நேரிட்டிருந்ததுடன், | 2020 ஆண்டில் நடைபெற்ற கொவிட் தொற்றுநோய் மத்தியில் உத்தியோகத்தர்களை கடமைக்கு அழைக்க முடியாமையின் காரணத்தினால் குறிப்பிட்ட தினத்தில் பெறுகை அலுவல்களை மேற்கொள்ள முடியாமல் போனது. எனினும், அலுவலக விடயங்களை தாமதம் இன்றி மேற்கொள்வதற்காக பெறுகை அலுவல்கள் ஆரம்பிக்கும் வரை உடன்படிக்கையை 03 மாதத்திற்கு நீடிக்கப்பட்டது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 18,000,000 இற்கான தொகையை அணவல் செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்காக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 18,000,000 இற்கான செலவு அமைச்சுக்கு ஏற்பட்ட நட்டமொன்றாக இருந்தது. | | |
| (ஆ) | நெலும்பொக்குன அரங்கத்திற்காக பயணப் பை பரிசோதனை செய்வதற்கான இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்தல் தொடர்பான ஒரு நிறுவனத்தினால் 02 விலைகூறல்கள் சமர்ப்பித்திருந்ததுடன், ரூபா 2,999,000 இற்கான விலை முதலாம் விலைகூறல் எனவும், ரூபா 5,400,000 இற்கான விலை இரண்டாம் விலைகூறல் எனவும், விலைகூறலை திறக்கும் குழுவினால் காட்டப்பட்டிருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு ரூபா 5,400,000 இற்கான விலையை முதலாவது விலைகூறல் எனவும், ரூபா 2,999,000 இற்கான விலையை இரண்டாவது விலைகூறல் எனவும் குறிப்பிட்டு விலைகூறல்களை மதிப்பாய்வு செய்யும் போது இரண்டாவது விலைகூறலை புறக்கணித்திருந்தது. இங்கு வேறு நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,800,000 இற்கான விலையை குறைந்த விலை என ஏற்றுக்கொண்டு இயந்திரத்தை அந்த கம்பனியினால் கொள்வனவு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தமையால் அமைச்சுக்கு ரூபா 1,801,000 இற்கான நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.17 இன் படி மாற்று கூறுவிலைகள் சமர்ப்பித்தல் அந்த விலைகூறலை புறக்கணிப்பதற்கு காரணமாக இருந்தது. | விலைகூறல்களை மதிப்பாய்வு செய்யும் போது பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நெலும்பொகுன நாடக அரங்கத்தின் 03 தனியார் தொடர்பாடல் நிறுவனங்களினால் நடாத்தப்பட்டு வருகின்ற செலுத்துகை அன்டனாவிற்கான சேவை வழங்குவதற்கான குத்தகை அறவீடு செய்யும் உடன்படிக்கை மேற்கொள்ளும் போது 2015 ஆண்டு இணங்கியிருந்த பெறுமதிக்கே 2020 ஆண்டிலும் குத்தகை | தொடர்பாடல் நிறுவனங்கள் அரங்கத்திற்கு செலுத்த வேண்டிய குத்தகை மற்றும் மின்சாரக் கட்டணம் தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கைகளில் தாமதக் கொடுப்பனவிற்கான தண்டப்பணம் விதித்தல் தொடர்பான நிபந்தனைகள் உட்படுத்திக்கொள்வதற்காக | புதிய பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிகள் உடன்படிக்கைளுக்கு உட்படுத்துவதற்காக மற்றும் தொடர்பாடல் நிறுவனங்கள் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு ஆளாக்கக் கூடியவாறு உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கைகளுக்கு அணுகியிருந்தது. 2021 ஜனவரி முதல் ஒக்தோபர் வரையான காலப் பகுதிக்குரிய மூன்று தனியார் தொடர்பாடல் நிறுவனங்களினால் செலுத்தப்படாத குத்தகை பெறுமதி ரூபா 1,550,000 தொகை மற்றும் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்காக அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,222,263 தொகை எனினும் உடன்படிக்கைகள் மேற்கொள்ளும் போது கொடுப்பனவுகளின் தாமத்தின் போது அறவிடப்பட வேண்டிய தண்டப் பணம் சுட்டிக் காட்டப்பட்டிருக்காமையால் தாமதத் தண்டப் பணம் அறவீடு செய்ய முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். | எடுக்க வேண்டும். |

## 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஜனவரி 09 திகதிய இலக்கம் SA/AMP/Deposit/Transfer கொண்ட அரச கணக்கு பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி நெலும்பொகுன நாடக அரங்கம் தனியான செயற்திட்டம் ஒன்றென கணித்து அதனை பராமரிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் பாதீட்டின் மூலம் ஏற்பாடு செய்துகொள்வதற்கும் உழைக்கப்பட்ட வருமானத்தை அரச நிதி கொள்கைத் திணைக்களத்திடம் வினவி பொருத்தமான வருமானத் தலைப்பொன்று செலவு வைப்பதற்கும் கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இலக்கம் 6000-0-0-020-009-0 கொண்ட வைப்புக் கணக்கின் மூலம் கொடுக்கல் வாங்கல் நடாத்தப்பட்டிருந்தது. | 2020 ஆண்டிற்கான ஏற்பாடுகளுக்காக பொறுத்தமான செலவு விடயம் ஒன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி பாதீட்டுத் திணைக்களத்திற்கு அரச கணக்குப் பணிப்பாளர் நாயகத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அலுவல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. எதிர் காலத்தில் அரச கணக்குத் திணைக்களத்துடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். | நாடக அரங்கம் தனியான செயற்திட்டமொன்றென கணித்து அதனை பராமரிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் பாதீட்டின் மூலம் ஒதுக்கிக்கொள்வதற்கும் உழைக்கும் வருமானத்தை அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்திடம் வினவி பொருத்தமான வருமானத் தலைப்பொன்றிற்கு செலவு வைப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நெலும்பொகுன நாடக அரங்கை வாடகை அடிப்படையில் வழங்கும் போது குறிப்பிட்ட வாடகைக்கு பெறும் தரப்பினருடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்த போதிலும், நாடக அரங்கு முறைான சட்ட ரீதியான தனித்தன்மையுள்ள நிறுவனம் ஒன்றாக நிறுவுவதற்காக | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். அமைச்சரவை அங்கீகாரத்துடன் நெலும்பொகுன நாடக அரங்கு முறையான நிறுவனம் ஒன்றாக நிறுவுவதற்கான நடவடிக்கை | நெலும்பொகுன நாடக அரங்கு முறையாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்காமையால் அந்த உடன்படிக்கை சட்டரீதியான செல்லுபடியாகும் தன்மையொன்று காணப்படவில்லை. | மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (இ) | நெலும்பொகுன நாடக அரங்கத்தின் மின் நுகர்வுச் செலவு நாட்டில் தனிப்படுத்தல் ஊடங்கு காணப்பட்ட 2021 மே மற்றும் ஜுன் மாதங்களில் முறையே ரூபா 1,448,590 தொகை, ரூபா 1,261,714 தொகை மற்றும் செயற்பாடுகள் ஏதும் நடைபெற்றிருக்காத 2021 செப்தம்பர் மாதத்தில் ரூபா 1,519,859 தொகை போன்ற கூடிய பெறுமதிகளை கொண்டிருந்தது. மேலும், நிலையத்தின் மின் பில் பத்திரங்கள் அறவீடு செய்யும் முறையாகிய General Purpose - 03 கீழ் kva-209152249 மானி வாசிப்பு வகையின் கீழ் அலகு ஒன்றிற்கு அறவீடு செய்யும் தொகை மிகவும் கூடிய பெறுமதியை கொண்டிருந்த போதிலும், அந்த அறவீடு செய்யும் முறையை மாற்றம் செய்து மின் கட்டணத்தை குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தக் காலப் பகுதியில் உத்தியோகத்தர்களுக்கு வெளியே செல்லவிடாமை காரணத்தினால் அந்த உத்தியோகத்தர்கள் 24 மணித்தியாலங்களும் தங்கியிருந்தமையால் மின் குமிழ், மின் விசிரி செயற்படுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக நெலும்பொக்குன பராமரிப்பு அலுவல்களுக்காக கையொப்பமிடப்பட்டிருந்த இரண்டாவது புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி அந்த காலப் பகுதியில் Sound System, Lighting System, CCTV போன்றவை தாபித்தல் சீன கம்பனியினால் இந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் காரணமாக இந்தக் காலப் பகுதியில் மின்சாரக் கட்டணம் குறைவடைந்திருக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | மின்சாரக் கட்டணத்தை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஈ) | அபேகம வளாகத்தில் காணப்படும் 13 ஏக்கர் 03 ரூட் 25.1 பர்சஸ்களை கொண்ட காணியின் உரிமை மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் என்பன நகர மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் காணப்படும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து முறையாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மாணத்தின் படி 2021.12.14 திகதிய AG/01/08 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவருக்கு பிரதி ஒன்றுடன் நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றல், மற்றும் சமூக சுத்த அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு அபேகம வளாகத்திற்குரிய காணிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. | காணியின் உரிமையை முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2020 நவம்பர் 20 திகதிய 2202/25 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அபேகம வளாகம் (அபேகம | இலக்கம் 2202/25 கொண்ட மற்றும் 2020.11.20 திகதிய அதிவிஷேட வர்த்தமான அறிவிப்பின் படி அபேகம | குறிப்பிட்ட செலவுகளை மத்திய கலாச்சார நிதியத்திலிருந்து தீர்த்துக்கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக வளாகம் தவிர) தேசிய மரபுரிமை அருங்கலை கிராமிய சிற்பக்கலை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் கீழ் உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் மத்திய கலாச்சார நிதியத்தினால் வளாகத்தை அமைச்சுக்கு 2021 ஏப்ரல் 01 திகதி முதல் உரித்தாக்கியிருந்தது. குறிப்பிட்ட காலப் பகுதியில் அபேகம வளாகத்தின் மூலம் உழைக்கப்பட்டிருந்த ரூபா 1,264,500 தொகை மத்திய கலாச்சார நிதியம் பயன்படுத்தியிருந்தது. அந்தக் காலப் பகுதிக்கான ஊழியர் செலவுகளும் அந்த நிதியத்தில் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 ஜனவரி முதல் 2021 மார்ச் வரை தொழிலாளர் கொடுப்பனவு என ரூபா 254,000 தொகை இராஜாங்க அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. | வளாகம் தேசிய மரபுரிமை அருங்கலை கிராமிய சிற்பக்கலை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் விடயப் பரப்பிற்கு உரித்தாக்கியிருந்த போதிலும், அபேகம வளாகத்தை நடாத்திச் செல்வதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக பதவியணியினர் இணைக்கப்பட்டிருந்த போதிலும், ஏற்பாடுகள் காணப்படாமையால் அக் காலப் பகுதியில் மத்திய கலாச்சார நிதியத்தினால் நிர்வகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த 04 மாதங்களில் அபேகம வளாக அலுவல்களுக்காக மத்திய கலாச்சார நிலையம் ரூபா 8,516,760 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021.04.01 திகதி முதல் இராஜாங்க அமைச்சுக்கு அபேகம முறைப் பிரகாரம் உரித்தாக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2020 ஆகஸ்ட் 09 திகதிய 2187/27 இலக்கம் கொண்ட வர்த்தமானியின் மூலம் கிராமிய கிராமியக் கலை தலைமையகம் இராஜாங்க அமைச்சுக்கு உரித்தாக்கப்பட்ட போதிலும், தலைமையகத்தை சட்டரீதியாக நிறுவுவதற்காக இராஜாங்க அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கிராமியக் கலை தலைமையகம் 2020.08.09 திகதி வரை அளவிலும் சட்டமொன்றின் மூலம் முறைப் பிரகாரம் நிறுவப்பட்டிருந்தது. | கிராமியக் கலை தலைமையகம் சட்டரீதியாக நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல். |
| (எ) | 2021 ஏப்ரல் 11 திகதிய CDD/MISC/CASE/127/2020 இலக்கம் கொண்ட கடிதத்தின் படி இலங்கை சுங்கத்தினால் இராஜாங்க அமைச்சுக்கு விடுவிக்கப்பட வேண்டியிருந்த பறிமுதல் செய்யப்பட்ட இரண்டு வாகனங்கள் குறிப்பிட்ட கட்டணங்களை செலுத்தி விடுவித்துக்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் 2021 ஏப்ரல் 29 திகதி வரை குறிப்பிட்ட வாகனங்களுக்காக ரூபா 1,376,462 இற்கான தாமதக் கட்டணம் ஒன்று செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தன. | பறிமுதல் செய்யப்பட்ட இந்த வாகனங்கள் சுங்கத்தினால் இந்த அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணத்திற்காக போதியளவு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக திறைசேரியிற்கு கோறிக்கை விடுக்கப்பட்டது. உரிய ஏற்பாடுகள் இதுவரை கிடைத்திருக்கவில்லை. | இரண்டு வாகனங்களையும் குறிப்பிட்ட கட்டணங்களை செலுத்தி விடுவித்துக்கொள்வதற்கும் மற்றும் தாமதக் கட்டணத்தை அணவல் செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மலை நாட்டு மரபுரிமை தொடர்பாக முறையான நியதிச் சட்டச் சபை / அதிகார சபை ஒன்று நிறுவும் வரை மலை நாட்டு மரபுரிமைகளை பாதுகாப்பதற்குரிய விஷேடத்துவ அறிவை உடைய 10 பேர் அடங்கிய அலோசனை சபை ஒன்று நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், இந்த ஆலோசனை சபை 2020 செப்தம்பர் முதல் 2021 செப்தம்பர் வரை ஒருமுறை மாத்திரமே ஒன்றுகூடியிருந்தது. | ஆலோசனை சபையின் அங்கத்தவர்கள் இந்த நாட்டின் கௌரவமுள்ள பிரஜைகள், வேலைப் பழுவுள்ள அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களாக காணப்பட்டதுடன், நிலவிய தொற்றுநோய் நிலைமையில் அவர்களை அழைத்தல் மிகவும் ஆபத்து நிலை மற்றும் சிரம நிலைக்கு முகங்கொடுக்க நேரிடல் மற்றும் அரசாங்கத்தினால் அடிக்கடி கூட்டங்கள் கூடுதல் தொடர்பாக சுகாதார ஆலோசனைகள் வழங்கியதன் காரணமாக நிலைமை சீரடையும் வரை ஆலோசனை சபைக் கூட்டங்கள் நடாத்துவது பிற்போடப்பட்டது. | மலை நாட்டு மரபுரிமை தொடர்பாக முறையான நியதிச் சட்டச் சபை/ அதிகார சபை ஒன்று நிறுவப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அமைச்சினால் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள் மற்றும் அதன் கீழுள்ள செயற்பாடுகள் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் என காட்டப்பட்டுள்ளது. | செயலாற்றுகை அறிக்கையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அமைச்சினால் அந்த இலக்குகளை அடைவதற்காக செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களின் குறிக்கோள்கள் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளுடன் சீர்செய்து குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40 இன் படி உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு அல்லது உள்ளகக் | இந்த அமைச்சிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்காமையால் அந்தப் பதவியை | உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரித்துக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திடம் வேண்டப்பட்டுள்ளது. பதவி அங்கீகரித்தவுடனே உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று நிறுவுவதற்கு எதிர்பார்க்கின்றோம். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சிற்காக சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் முறையே 9,3,37 மற்றும் 13 வீதம் 62 பதவியிணியினர் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், உள்ளவாறான பதவியணி முறையே 7,0,50 மற்றும் 5 ஆக காணப்பட்டது. அதன்படி, சிரேஷ்ட, மூன்றாம் மற்றும் ஆரம்ப மட்டங்களைச் சேர்ந்த 13 ஊழியர்கள் பற்றாக்குறையாகவும் மற்றும் இரண்டாவது மட்டத்துக்குரிய 13 உத்தியோகத்தர்கள் மிகையாகவும் காணப்பட்டது. | அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இரண்டாம் மட்ட மிகை உத்தியோகத்தர்கள் இந்த அமைச்சினால் கோறிக்கை விடுக்கப்படாமல் பொதுச் சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து இணைக்கப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தர்களின் மிகை தொடர்பாக இலக்கம் NH/AD/02/GT கொண்ட மற்றும் 2021.10.28 திகதிய கடிதத்தின் மூலம் அந்த அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது. | சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டங்களைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை பேணிச் செல்ல வேண்டும். |